திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு மானியத்தில் பண்ணைக் கருவிகள்**

First Published : 09 May 2010 09:39:30 AM IST

மதுரை, மே 8: மதுரை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் விசாயிகளுக்கு மானியத்தில் பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டு வருவதாக ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வேளாண் பணிகளில் கூலியாள்கள் பற்றாக்குறை மற்றும் அதிக இடுபொருள் செலவு போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ள பண்ணைக் கருவிகளான பவர் டில்லர், உழவுக் கருவிகள், சூழல் கலப்பைகள், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டம் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

நெல் நடவு இயந்திரத்துக்கு 50 சதம் மானியம் அல்லது ரூ.75,000, பலர் டில்லர்களுக்கு 40 சதம் மானியம் அல்லது ரூ.45,000, சுழல் கலப்பைகளுக்கு 25 சதம் மானியம் அல்லது ரூ.20,000, களையெடுக்கும் கருவிகளுக்கு 50 சதம் அல்லது அதிகபட்சமாக ரூ.50,000 உள்ளிட்டவை மானியமாக வழங்கப்படுகிறது.

மேலும், வேளாண் இயந்திரங்கள் சேவை மையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அக்ரி கிளினிக், சுய உதவிக் குழுக்கள், விவசாயி குழுக்கள் ஆகியோர் அமைத்து ரூ. 16 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கும்பட்சத்தில் அரசு மானியம் ரூ. 4 லட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

பழைய மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி ஐ.எஸ்.ஐ. தரம் வாய்ந்த திறன் மிக்க புதிய மோட்டார் பம்பு செட்டுகளைப் பொருத்தும் விவசாயிகளுக்கு 50 சதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10,000 மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் மண்வளம் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் பொருட்டு மழைநீர் சேகரிக்கும் திட்டம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ள வட்டாரப் பகுதிகளி செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

நீர்வடிப் பகுதியில் விவசாயிகள் சங்கம் சார்பில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு 10 சதம் பங்களிப்பும், பொது இடங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு 5 சதம் பங்களிப்பும் பயனாளிகளிடம் பெறப்பட்டு நீர்வடிப் பகுதி வளர்ச்சி நிதிக் கணக்கில் செலுத்தி வருங்காலப் பராமரிப்புப் பணிகளுக்கு செலவிடப்படும்.

இந்தத் திட்டப்பணிகள் அனைத்தும் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

பயன்பெற விரும்பும் விவசாயிகள், வேளாண் செயற்பொறியாளர் } 0452} 2678639, உதவி செயற்பொறியாளர்} 0452} 2677990, உதவி செயற்பொறியாளர் (உசிலம்பட்டி)} 04552} 253604 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம்.

**புளி விலை உயர்வு!**

First Published : 10 May 2010 06:03:34 AM IST

போச்சம்பள்ளி, மே 9: போச்சம்பள்ளி ஞாயிறு வாரச் சந்தையில் 1 கிலோ புளி ரூ.32-க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் இது ரூ.25-க்கு விற்பனையானது.

ஆந்திரத்தில் இருந்து அதிக அளவு உற்பத்தியானதால், ரஸ்தாளி வாழைப்பழம் இங்கு ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன. ரூ.10-க்கு 3 பழம் விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல் 1 கிலோ தக்காளி ரூ.18 முதல் ரூ.20 வரையிலும், சின்ன வெங்காயம் 1 கிலோ ரூ.14-க்கும், பெரிய வெங்காயம் ரூ.10-க்கும், சிக்கடிக்காய் ரூ.20-க்கும், கத்திரிக்காய் ரூ.14-க்கும் விற்பனையானது.

**"இயற்கை உணவு ஆரோக்கிய வாழ்வைக் கொடுக்கும்'**

First Published : 09 May 2010 11:40:26 AM IST

தஞ்சாவூர், மே 8: இயற்கை உணவு ஆரோக்கிய வாழ்வை கொடுக்கும் என்றார் இயற்கை வேளாண் விவசாயி கோ. சித்தர்.

தஞ்சாவூரில் சனிக்கிழமை நடைபெற்ற தஞ்சாவூர் நடைப் பயிற்சியாளர் சங்கக் கூட்டத்தில் மேலும் அவர் பேசியது:

நடை என்பது ஓர் வாழ்வியல் மந்திரம். நடையும், உணவும் இரு கண்கள் போன்றவை. அதிகாலை 4 முதல் 6 மணி வரை ஒரு உந்துதல் சக்தி கிடைக்கும்.

அந்த நேரத்தில் எழுந்து உடல் பயிற்சிகளில் ஈடுபடுவது மிகவும் நல்லது.

வாழ்க்கை முறையில் கட்டுப்பாடான உணவு முறையும், முறையான நடையும் இருந்தால் எவ்வித நோயும் வராது.

கார உணவு நோயைத் தீர்க்கும், அமில உணவு நோயை தீர்க்காது. எனவே, பிறப்பிலிருந்து 40 வயது வரை நாள்தோறும் ஒரு வேளைக்காவது இயற்கை உணவை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவம் என்பது மிக அவசியமாகிவிட்டது. ஒரு சமூகத்துக்கு நல்ல உணவைக் கொடுக்க வேண்டும்.

நாம் உண்ணும் உணவு செயலை தீர்மானிப்பதுடன், நல்ல சிந்தனையைக் கொடுக்கும் போது, ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும். மனிதர்களாகிய நாம் மனதால் நடப்பதைத் தவிர்த்து, கால்களால் நடக்க வேண்டும் என்றார் சித்தர்.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் ராஜாராம் தலைமை வகித்தார். செயலர் கணேசன், பொருளாளர் முகமது யாசின், உறுப்பினர்கள் டிஎஸ்பி. அல்மாஸ் அலி, ராஜசேகர், வீரமணி, அறிவானந்தம், தங்கவேல், சுகுமார், தஞ்சாவூர் நகர்மன்ற முன்னாள் தலைவர் ஜெயபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் பண்ணைக் கருவிகள்**

First Published : 09 May 2010 09:39:30 AM IST

மதுரை, மே 8: மதுரை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் விசாயிகளுக்கு மானியத்தில் பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டு வருவதாக ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

வேளாண் பணிகளில் கூலியாள்கள் பற்றாக்குறை மற்றும் அதிக இடுபொருள் செலவு போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ள பண்ணைக் கருவிகளான பவர் டில்லர், உழவுக் கருவிகள், சூழல் கலப்பைகள், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் மத்திய அரசு நிதியுதவி பெறும் திட்டம் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

நெல் நடவு இயந்திரத்துக்கு 50 சதம் மானியம் அல்லது ரூ.75,000, பலர் டில்லர்களுக்கு 40 சதம் மானியம் அல்லது ரூ.45,000, சுழல் கலப்பைகளுக்கு 25 சதம் மானியம் அல்லது ரூ.20,000, களையெடுக்கும் கருவிகளுக்கு 50 சதம் அல்லது அதிகபட்சமாக ரூ.50,000 உள்ளிட்டவை மானியமாக வழங்கப்படுகிறது.

மேலும், வேளாண் இயந்திரங்கள் சேவை மையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அக்ரி கிளினிக், சுய உதவிக் குழுக்கள், விவசாயி குழுக்கள் ஆகியோர் அமைத்து ரூ. 16 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் வாங்கி விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கும்பட்சத்தில் அரசு மானியம் ரூ. 4 லட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

பழைய மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி ஐ.எஸ்.ஐ. தரம் வாய்ந்த திறன் மிக்க புதிய மோட்டார் பம்பு செட்டுகளைப் பொருத்தும் விவசாயிகளுக்கு 50 சதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10,000 மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் மண்வளம் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் பொருட்டு மழைநீர் சேகரிக்கும் திட்டம் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ள வட்டாரப் பகுதிகளி செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

நீர்வடிப் பகுதியில் விவசாயிகள் சங்கம் சார்பில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு 10 சதம் பங்களிப்பும், பொது இடங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு 5 சதம் பங்களிப்பும் பயனாளிகளிடம் பெறப்பட்டு நீர்வடிப் பகுதி வளர்ச்சி நிதிக் கணக்கில் செலுத்தி வருங் காலப் பராமரிப்புப் பணிகளுக்கு செலவிடப்படும்.

இந்தத் திட்டப்பணிகள் அனைத்தும் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

பயன்பெற விரும்பும் விவசாயிகள், வேளாண் செயற்பொறியாளர் } 0452} 2678639, உதவி செயற்பொறியாளர்} 0452} 2677990, உதவி செயற்பொறியாளர் (உசிலம்பட்டி)} 04552} 253604 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம்.

**மா, முந்திரி விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் மானியம்**

First Published : 08 May 2010 11:30:09 AM IST

போடி, மே 7: மா, முந்திரி பயிரிடும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது என்று போடி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் வே.கெர்சோன் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2009-10 நிதியாண்டில் செயல்படுத்தப்பட்ட தேசிய
மூங்கில் இயக்க திட்டத்தின் கீழ் 0.5 ஹெக்டர் நிலத்தில் புதிதாக மூங்கில் பயிர் செய்த போடிமெட்டு மலை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அமர்நாத்துக்கு ரூ.2 ஆயிரம் மானியம் வழங்கப்பட்டது.

தற்போது 2010-11-ம் ஆண்டுக்கான தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் மானியங்கள் அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மா விவசாயத்தில் அடர் நடவு செய்பவர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு முதல் ஆண்டு ரூ.24 ஆயிரம், 2 மற்றும் 3-ம் ஆண்டுகளில் தலா ரூ.8 ஆயிரம் வீதம் ரூ.40 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

மா விவசாயத்தில் சாதாரண நடவு செய்யும் விவசாயிகளுக்கு முதல் ஆண்டு ரூ.18 ஆயிரமும், 2 மற்றும் 3-ம் ஆண்டுகளில் தலா ரூ.6 ஆயிரம் வீதம் ரூ.30 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு மா விவசாயம் சாதாரண நடவுக்கு ரூ.22 ஆயிரத்து 500 வழங்கப்பட்டது.

முந்திரி மற்றும் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டருக்கு முதல் ஆண்டு ரூ.12 ஆயிரமும், 2 மற்றும் 3-ம் ஆண்டுகளில் தலா ரூ.4 ஆயிரம் வீதமும் மொத்தம் ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. இது கடந்த ஆண்டில் ரூ.11 ஆயிரத்து 250 வழங்கப்பட்டது.

மிளகாய் பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.12 ஆயிரத்து 500 ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது. மா, முந்திரி, கோகோ, மிளகாய் பயிரிடும் விவசாயிகள் அதிகபட்சம் 4 ஹெக்டேர் வரை மானியம் பெறலாம்.

போடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் மேற்கண்ட மானியங்களை பெற போடி தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

**புதிய சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கேட்ட விவசாயிகள்**

First Published : 06 May 2010 12:43:10 PM IST

மேலூர்,மே 5: மதுரை வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்றுவரும் கரீப் பருவ வேளாண் வளர்ச்சி மற்றும் கருத்தரங்கப் பணிமனையில் செம்மைநெல் சாகுபடி மற்றும் நவீன வேளாண் கருவிகள் செயல்பாடு குறித்து, விவசாயிகள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இதுகுறித்து, மதுரை வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ப.சங்கரலிங்கம் கூறியதாவது:

வேளாண்மையில், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சாகுபடித் தொழில்நுட்பங்களை, அனைத்து விவசாயிகளும் நேரடியாக அறிந்துகொண்டு, தங்கள் நிலத்தில் செயல்படுத்தும் வகையில், இந்தக் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கி புதன்கிழமை வரை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர், கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெற்றுள்ளனர்.

வியாழக்கிழமை இப்பணிமனை நிறைவடைகிறது.

தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச் சான்றிதழ், பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை, மீன்வளம் ஆகிய துறையினர் இணைந்து, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் இந்த பணிமனையை நடத்துகின்றனர்.

அந்தந்த வட்டார அளவிலான விவசாயத்துக்குத் தேவையான கோடை உழவு, விதை நேர்த்தி, விதையைக் கடினப்படுத்துதல், கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு, செம்மை நெல் சாகுபடி, களையெடுத்தல், மானவாரி விதைப்பு மற்றும் பின்செய் நேர்த்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், அறுவடை, அதன்பின் மதிப்புக் கூட்டுதல் ஆகியவை பற்றி வேளாண் அதிகாரிகள் எடுத்துக் கூறியதுடன், நவீன கருவிகளைக் கொண்டு செயல்விளக்கமும் அளித்தனர்.

மேலும் விவசாயிகள் நேரடியாகவும் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

**ஏப்.29 விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

First Published : 06 May 2010 11:49:37 AM IST

திண்டுக்கல், ஏப். 26: திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வரும் வியாழக்கிழமை (ஏப்ரல் 29) நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் மா. வள்ளலார் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

அன்றைய கூட்டத்தில் ஏற்கெனவே விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விவாதிக்கப்பட உள்ளது.

எனவே விவசாயிகளும், விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமலர்

**சூறாவளியால் விவசாயிகள் விரக்தி சுருண்டன, ஒரு லட்சம் வாழைகள்**

மேட்டுப்பாளையத்தில் அடுத் தடுத்து சுழற்றி வீசிய சூறாவளி காற்றில் ஒரு லட்சம் வாழை, 1000 பாக்கு மரங்கள், 50 தென்னை மரங்கள் முறிந்து விழுந்து நாசமாயின; 20 வீடுகளும் சேதமடைந்தன. இதனால், ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.மேட்டுப்பாளையத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் 3.30 மணிக்கு மழையுடன், பலத்த சூறாவளி காற்று வீசியது. ஊமப்பாளையம், ராமசாமி நகர், உப்புப்பள்ளம், பாலப்பட்டி, அண்ணாநகர், சிறுமுகை ரோட்டில் அறிவொளி நகர், மோத்தேபாளையம், குத்தாரிபாளையம் பகுதிகளில் 70 ஆயிரம் வாழைகள் முறிந்து விழுந்தன.

இதே போன்று, கடந்த 6ம் தேதி வீசிய சூறாவளி காற்றில் 30 ஆயிரம் வாழைகள் விழுந்து நாசமாயின. அடுத்தடுத்து வீசிய சூறாவளி காற்றால், சிறுமுகை, மேட்டுப்பாளையம் பகுதியில் வாழை விவசாயிகள் மிரண்டு போயுள்ளனர்.நேற்று முன் தினம் வீசிய காற்றால், ஊட்டி மெயின் ரோட்டில் கல்லாறு வரை 30 மரங்கள் முறிந்து விழுந்தன. மகாதேவபுரம், வினோபாஜி நகர் பகுதிகளில் மரங்கள் விழுந்து ஐந்து வீடுகள் சேதமடைந்தன. கூடுதுறை மலைப்பகுதியில் 10 வீடுகளின் மேற்கூரைகள் பறந்தன; ஐந்து வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்கள், வசிக்க வீடின்றி அவதிப்படுகின்றனர். கூடுதுறை மலைவாழ் மக்கள் கூறுகையில்,'விவசாய கூலி வேலைக்கு செல்லும் நாங்கள் சூறாவளி காற்றில் வீடுகளை இழந்துவிட்டோம். நிவாரண நடவடிக்கையாக அரசு வீடு கட்டிகொடுத்தால், எங்களது குடும்பங்கள் மறுவாழ்வு பெறும்' என்றனர்.

ஊமப்பாளையம், பாலப்பட்டி விவசாயிகள் கூறியதாவது:கூலி வேலைக்கு ஆள் பற்றாக்குறை உள்ளதால், விவசாயிகள் பெருமளவில் வாழை பயிர் செய்துள்ளனர். விவசாயிகளில் 70 சதவீதம் பேர் கடன் பெற்று ரோபஸ்டா, கதளி, நேந்திரம், பூவன் ரக வாழைகளை பயிர் செய்துள்ளனர். கன்று நட்ட ஆறாவது மாதத்தில் பூ விடும்; நன்கு முற்றிய வாழைத்தார் 9,10வது மாதத்தில் அறுவடை செய்யப்படும். வனப்பகுதி ஓரத்தில் உள்ள தோட்டத்தில் யானைகள் புகுந்து நூற்றுக்கணக்கான வாழை மரங்களை நாசம் செய்கின்றன.

இதன் பாதிப்பிலிருந்தே விடுபடமுடியாமல் தவித்து வந்தோம். இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து வீசிய சூறாவளி காற்றில் ஒரு லட்சம் வாழை மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. விவசாயிகளுக்கு ஒரு கோடி ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும், தோட்டத்தில் முறிந்து கிடக்கும் வாழையை அப்புறப்படுத்த ஒரு வாழைக்கு நான்கு ரூபாய் கூலி கேட்கின்றனர். இதனால், விவசாயிகளுக்கு மேலும் கடன் சுமை, செலவு அதிகமாகும். சேத மதிப்பு அதிகமாக இருப்பதால், தமிழக அரசு ஆய்வு செய்து நிவாரணம் வழங்க வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.- நமது நிருபர் –

**தேயிலை உற்பத்தி அதிகரிப்பு: தொழிலாளர்கள் மகிழ்ச்சி**

வால்பாறை: வால்பாறையில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பால், தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வால்பாறையில், 50க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டில், ஒரு லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பகுதியில் விளையும் தேயிலை கொச்சி, கோவை, குன்னூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள ஏல மையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.கடந்த சில மாதங்களாக வால்பாறையில்

மழையில்லாததால், வறட்சியின் காரணமாக தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால், தற்காலிக தொழிலாளர்கள் வேலையிழந்தனர்.இந்நிலையில், வால்பாறை மற்றும் சுற்றுப்பகுதிகளில், கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக தொடர் மழை பெய்து வருவாதல், தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மரவள்ளி பயிரை தாக்கும் மஞ்சள்காரை நோய்: விவசாயிகள் கவலை**

சிறுபாக்கம்: மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் சிறு, குறு விவசாயிகள் பயிர் செய்த மரவள்ளியில் மஞ்சள் காரை நோய் தாக்குவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மங்களூர், நல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த வேப்பூர், பெரியநெசலூர், சேப் பாக்கம், சிறுபாக்கம், கழுதூர், அரியநாச்சி, காட்டுமைலூர், அடரி, ஒரங்கூர், வள்ளிமதுரம், மங்களூர் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் விளை நிலத்தில் நிலத்தடி நீரைக் கொண்டு கரும்பு, மரவள்ளி, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை செய்து வருகின்றனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக கரும் புக்கு போதிய விலை கிடைக்கப்பெறாததாலும், வெட்டுக்கூலி உயர்வு மற்றும் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பெரும்பாலான விவசாயிகள் தங்களின் விலை நிலங்களில் கரும்பு பயிரை தவிர்த்தனர்.இந்நிலையில் அதிக விலை கிடைக் கும் குங்குமரோஸ், பர்மா, ரோஸ் ரக மரவள்ளி பயிர்களை கடந்த ஜனவரி முதல் பயிர் செய்து களை எடுத்து நீர்பாய்ச்சி வருகின்றனர்.தற்போது மரவள்ளி பயிர்கள் வளர்ந்துள்ள நிலையில் திடீரென மஞ்சள் காரை நோய் தாக்கி வளர்ச்சி பெறாமல் கருகி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டு களாக மரவள்ளிக்கு போதிய விலை கிடைத்த ஆர்வத்தில் தங்களது விளை நிலத்தில் மரவள்ளி பயிர்களை செய்த நிலையில் மஞ்சள் காரை நோய் தாக்கு தலால் விவசாயிகள் கவலையடைந்துள் ளனர்.

**மஞ்சள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 16 ஆயிரத்து 90 ரூபாய்க்கு ஏலம் போனதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில் அரூர், மொரப்பூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள் அதிகளவு மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். அவற்றை கூட்டுறவு விற்பனை சங்கத்திலும், வியாபாரிகளிடமும் விற்பனை செய்து வருகின்றனர். அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் மஞ்சள் ஏலம் நடந்தது. அரூர் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மொத்தம் 470 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு 16 ஆயிரத்து 90 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் குவிண்டால் 15 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் ஏலம் போனது.கடந்த வாரம் நடந்த ஏலத்துடன் ஒப்பிடும்போது, குவிண்டாலுக்கு மஞ்சள் விலை 500 ரூபாய் முதல் 600 வரை விலை உயர்ந்துள்ளது. சேலம், ராசிபுரம், நாமக்கல், தர்மபுரி, கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து வந்த வியாபாரிகள் போட்டி போட்டு மஞ்சளை ஏலம் எடுத்தனர். உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் மஞ்சளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பாலகிருஷ்ணன் கூறுகையில், "கடந்த சில மாதங்களாக மஞ்சளுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் மஞ்சள் சாகுபடி பரப்பும் அதிகரித்துள்ளது. கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உள்ள கிடங்கில் மஞ்சளை அடுக்கி வைக்கும் வசதி உள்ளது. மூன்று மாதம் வரை கிடங்கில் அடுக்கி வைத்து

பாதுகாக்கலாம். குறிப்பிட்ட தொகை வாடகை வசூலிக்கப்படும். மஞ்சளுக்கு அடமான கடனும் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தர தயாராக உள்ளோம். விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கூட்டுறவு சங்கத்தில் மஞ்சளை விற்பனை செய்து பயனடைய கேட்டு கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**மழையால் வெல்லம் விலை ரூ. 100 உயர்வு**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ததால் வெல்லம் விலை மூட்டைக்கு 100 ரூபாய் அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் முள்ளம்பரப்பு, அம்மாபேட்டை, வடபழனி, பிழிக்கல்பாளையம் ஆகிய இடங்களில் வெல்லமும், கோபி, கவுந்தபாடி, அலங்கியம், பவானி ஆகிய இடங்களில் நாட்டு சர்க்கரையும் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை கவுந்தப்பாடி, சித்தோடு ஆகிய சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் மழைக்காரணமாக நாட்டு சர்க்கரை, வெல்லம், அச்சு வெல்லம் உற்பத்தி சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளது. கரும்பு அறுடை சீஸன் முடிந்ததால் வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் சித்தோடு, கவுந்தப்பாடி வெல்ல மார்க்கெட்டுக்கு வெல்லம் வரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வெல்லம் விலை மூட்டைக்கு 100 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் 1,100 முதல் 1,400 ரூபாய் வரை விற்கப்பட்ட 60 கிலோ நாட்டு சர்க்கரை 1,250 முதல் 1,500 ரூபாய், 650 முதல் 840 ரூபாய் வரை விற்கப்பட்ட 30 கிலோ உருண்டை வெல்லம் 680 முதல் 880 ரூபாய், 670 முதல் 850 ரூபாய் வரை விற்கப்பட்ட 30 கிலோ அச்சு வெல்லம் 720 ரூபாய் முதல் 900 ரூபாயாக உயர்ந்துள்ளது. வெல்லம் விலை உயர்ந்துள்ளதால் வெல்ல உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அவர்கள் கூறியதாவது: சர்க்கரை விலையை விட நாட்டு சர்க்கரை விலை குறைவு என்பதால் பல்வேறு இனிப்பு வகை, தின்பண்டம் தயாரிக்க நாட்டு சர்க்கரை பயன்படுத்தப்படுகிறது. நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் நாட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் தேவை அதிகரிப்பு காரணமாக விற்பனை நன்றாக இருந்தது. ஃபிப்ரவரி மாதத்தில் நாட்டு சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரிக்க துவங்கியது. பொதுவாகவே ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் வெல்லம் சீஸன் என்பதால் வெல்லம் விலை வீழ்ச்சியடைந்தது. சென்ற சில வாரத்தில் வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை மூட்டைக்கு 200 ரூபாய் வரை திடீரென சரிவு ஏற்பட்டதால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் திடீரென மழை பெய்தது. மழை காரணமாக வெல்லம் உற்பத்தி குறைந்து மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்துள்ளது. சில வாரங்களாக வடமாநில வியாபாரிகள் வராமல் இருந்தனர். தற்போது மீண்டும் அவர்கள் வருவதால் விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது. நாட்டு சர்க்கரை மூட்டைக்கு 100 ரூபாய், வெல்லம் மூட்டைக்கு 30 முதல் 40 ரூபாய், அச்சு வெல்லம் மூட்டைக்கு 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் கரும்பு அறுவடை சீஸன் முடிந்து விட்டது. தாராபுரம் பகுதியில் ஒரு சில இடங்களில் மட்டுமே கரும்பு அறுவடை நடக்கிறது. வெல்ல உற்பத்தியாளர்கள் இப்பகுதியில் இருந்து கரும்பு அறுவடை செய்து குறைந்தளவே வெல்லம் தயாரிக்கின்றனர். சித்தோடு, கவுந்தப்பாடி வெல்லம் மார்க்கெட்டுக்கு சில நாட்களாக வெல்லம் வரத்து குறைந்து விட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகரில் செம்மை நெல் சாகுபடியில் ஆர்வம்**

டி.என்.பாளையம்: பவானிசாகர் பகுதியில் செம்மை நெல் சாகுபடி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.கடந்த முறையை விட இம்முறை விளைச்சல் அதிகம் கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

பவானிசாகர் வட்டாரத்தில் சென்றாண்டு சம்பா, குறுவை பருவத்துக்காக 200 ஹெக்டேர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டது. வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்து ஆலோசனை வழங்கினர். மேட்டுப்பாத்தி அமைப்பதால் நடவும், அறுவடையும் சுலபமாகி, விளைச்சலும் கிடைக்கும். அத்துடன், ஏக்கருக்கு மூன்று கிலோ விதை நெல் மட்டுமே தேவைப்படுகிறது. ஒரு குத்துக்கு ஒரு நாற்று மட்டுமே நடப்பட்டது. நடவு செய்த பத்தாவது நாளிலிருந்து 10 நாட்களுக்கு ஒரு முறை 'கோனோவீடர்' என்ற கருவி மூலம் களையெடுக்கப்பட்டது.

பவானிசாகர் வேளாண் உதவி இயக்குனர் சுப்பிரமணியம் கூறியதாவது: சாதாரண நடவு முறையை விட இம்முறையில் ஒரு குத்துக்கு 40 தூர்கள் கட்டி நல்ல விளைச்சலைக் கொடுத்தது. நெல் மணிகள் தரம் உயர்ந்ததாக இருந்தது. பூச்சி நோய் தாக்குதல் மிகவும் குறைந்த அளவிலேயே இருந்தது. விதைச்செலவும் குறைவுதான். செம்மை நெல் சாகுபடி முறையில் சாதாரண முறையை விட ஏக்கருக்கு 500 முதல் 800 கிலோ நெல் அதிகம் கிடைத்துள்ளது. இத்திட்டத்தில் பங்கு பெற்ற 200 விவசாயிகளுக்கு கோனோவீடர், மார்க்கர் மற்றும் இடுபொருட்கள் வாங்க 3000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பவானிசாகர் பகுதியில் முதலில் மிகவும் குறைந்தளவு விவசாயிகளே செம்மை நெல் சாகுபடி செய்தனர். விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து, மானிய விலையில் இடுபொருட்கள் மற்றும் கோனோவீடர் கருவி வழங்கினோம். வேளாண் துறை வழிகாட்டுதலின் பேரில் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. இதைப்பார்த்த மற்ற விவசாயிகளும் செம்மை நெல் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**செம்மை நெல் சாகுபடி வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் செம்மை நெல் சாகுபடிக்காக நாற்று நடும் பணிகளை விவசாய துறை அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிடுவது அதிகரித்து வருகிறது. பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிக்கு ஏப்ரல் 15ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கோபி சவுண்டப்பூர், கூகலூர், புதுக்கரைபுதூர், செய்யாம்பாளையம், செங்கலகரை, சோழமாதேவிக்கரை உள்ளிட்ட பகுதிகளில் செம்மை நெல் சாகுபடி முறையில், நாற்று நடும் பணி நடந்து வருகிறது. பணிகளை கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைதம்பி பார்வையிட்டார். அப்போது உதவி வேளாண் அலுவலர்கள் ராஜா, மதன் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**முட்டைகோஸ் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

ஓசூர்: ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் குறைந்த முதலீட்டில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் முட்டைகோஸ் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,500 ஹெக்டேரில் காய்கறிகள் சாகுபடி நடக்கிறது. தமிழகத்தில் கோவை, ஊட்டிக்கு அடுத்தப்படியாக ஓசூர், தேன்னிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.குறிப்பாக

இரு தாலுகாவிலும் முட்டைகோஸ் 1,500 ஹெக்டேரில் விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இங்கு உற்பத்தியாகும் முட்டைகோஸ் பெங்களூரு, ஹைதராபாத், கேரளா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தினம் ஏற்றுமதியாகிறது.இரு மாதத்துக்கு முன் வரை 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை முட்டை கோஸ் 60 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, ஒரு மூட்டை முட்டைகோஸ் 360 ரூபாயில் இருந்து 400 ரூபாய் வரை விற்பனையாகிறது. உள்ளூர் சந்தைகள், உழவர்சந்தைகளில் ஒரு கிலோ முட்டைகோஸ் பத்து ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால், விவசாயிகளுக்கு ஏக்கருக்கு உற்பத்தி செலவு போக ஒரு லட்சம் ரூபாய் நிகர லாபம் கிடைக்கிறது. சாகுபடி செய்த 90வது நாளில் மகசூல் கிடைப்பதோடு நிலையான வருமானமும் கிடைப்பதால் விவசாயிகள் தற்போது முட்டைகோஸ் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஓசூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் காளிப்பன் கூறியதாவது:பொதுவாக முட்டைகோஸ் குளிர்பிரேதசங்களில் மட்டும் சாகுபடி செய்ய முடியும். மற்ற இடங்களில் சாகுபடி செய்தாலும் அவை வளர்ச்சியடையாது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ஆண்டு முழுவதும் குளிர்ந்த சீதோஷனநிலை காணப்படுவதால், முட்டைகோஸ் சாகுபடி செய்யப்படுகிறது. முட்டைகோஸ் சாகுபடியை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்க தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் அரசு துல்லிப்பண்ணை திட்டம், சொட்டு நீர் பாசன திட்டம் ஆகியவை மூலம் மானிய உதவிகள் வழங்கி வருகிறது. ஒரு ஹெக்டேருக்கு துல்லியபண்ணை திட்டம் அமைக்க 80 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அவற்றில் 48 ஆயிரத்து 640 ரூபாயை வேளாண் துறை மானியமாக வழங்குகிறது.

சொட்டு நீர் பாசனம் திட்டத்தில் முட்டைகோஸ் சாகுபடி செய்தால், விவசாயிகளுக்கு 37 ஆயிரத்து 440 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. துல்லியபண்ணை திட்டம் மூலம் முட்டைகோஸ் சாகுபடி செய்தால் உரம் செலவு குறைவதோடு, அதிக மகசூல் கிடைக்கிறது. உரங்கள் பெட்லேசர் மூலம் செடிகளுக்கு நேரடியாக வீணாகாமல் செல்கிறது. ஒரு ஏக்கர் முட்டைகோஸ் சாகுபடி செய்தால், 30 டன் வரை மகசூல் கிடைக்கிறது. வேளாண் துறை அறிவுறுத்தும் தொழில்நுட்பம், பரிந்துரைக்கும் நாற்றுகளை விவசாயிகள் சாகுபடி செய்தால், நிச்சயம் அதிக லாபம் பெறலாம். தற்போது, ஒரு நாற்று 25 பைசா மூலம் 50 பைசா வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த நான்கு மாதமாக தமிழகம் முழுவதும் கடும் வறட்சி ஏற்பட்டதால், மற்ற இடங்களில் முட்டைகோஸ் சாகுபடியில் எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை.ஓசூர், தேன்கனக்கோட்டையில் நல்ல மகசூல் கிடைத்தது. அதனால், கடந்த இரு மாதமாக வெளிமாநிலங்கள், மாவட்டங்களில் முட்டைகோசுக்கு வரவேற்பு ஏற்பட்டுள்ளது. வெளியூர் வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடம் விளை நிலங்களில் கொள்முதல் செய்து வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளுக்கு மானியம்**

மதுரை : "பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, பட்டு வளர்ச்சித் துறை மூலம் மானியம் வழங் கப்படும்," என, கலெக்டர் காமராஜ் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை :ஒரு ஏக்கரில் மல்பெரி செடி நடவுக்கு 4125 வீதம், அதிகபட்சமாக இரண்டரை ஏக்கர் நடவுக்கு மானியம் வழங்கப்படுகிறது. தனியாக புழுவளர்ப்பு மனை அமைக்க 1000 சதுரஅடிக்கு 50 ஆயிரம் மானியமும், 1500 சதுரஅடிக்கு 75 ஆயிரம் ரூபாய் மானியம். புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய 30ஆயிரம் ரூபாய் மானியம். சொட்டுநீர்ப்பாசனம் அமைக்க ஏக்கருக்கு 15ஆயிரம் வீதம் இரண்டரை ஏக்கருக்கு மானியம். வெண் பட்டுப் புழு வளர்ப்பில் கிருமிநாசினி வாங்க 1500 ரூபாய் மானியம் தரப்படுகிறது.ஆத்மா திட்டத்தின் கீழ், பட்டுப்புழு வளர்க்க

விரும்பும் விவசாயிகள், வெளி மாவட்டங்களில் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளின் பண்ணைக்கு நேரடியாக அழைத்துச் செல்லப்படுவர். நேரடி தொழில்நுட்பம், செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது என, தெரிவித்துள்ளார்.

**30 டன் கோதுமை கூடுதல் ஒதுக்கீடு:நாகை கலெக்டர் தகவல்**

நாகை:நாகை மாவட்டத்திற்கு கூடுதலாக 30 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் முனியநாதன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாகை மாவட்டத்தில் அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் கோதுமை வழங்க 220 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 2010 மே மாதத்திற்கு கூடுதலாக 30 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 250 டன் கோதுமை வழங்கப்பட உள்ளது.இதன்படி நாகை மாவட்ட தலைநகரங்களில் வசிக்கும் அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் கூடுதலாக 10 கிலோ கோதுமை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே மாவட்ட தலைநகரங்களில் வசிக்கும் ரேஷன் கார்டுதாரர்கள் அனைவரும் மே மாதத்தில் கூடுதலாக 10 கிலோ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமையை அந்தந்த ரேஷன் கடைகளில் பெற்று பயன்பெறலாம்.

**வாழையை சாய்த்த மழை : நஷ்டத்தில் விவசாயிகள்**

கூடலூர்: கூடலூர் பகுதியில், பலத்த காற்றுடன் பெய்த கனமழையால், வாழை மரங்கள் சாய்ந்தன; கடன் பெற்று விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள் நஷ்டமடைந்தனர்.
வெயிலின் தாக்கத்தால், கூடலூர், முதுமலை புலிகள் காப்பகத்தில் வறட்சி நிலவி, வனத்தீ ஏற்பட்டு, பல ஏக்கர் பரப்பு நாசமானது;

கடந்த மார்ச் 14ம் தேதி முதுமலை புலிகள் காப்பகம் மூடப்பட்டது. சில வாரங்களுக்கு முன், இப்பகுதியில் பெய்த தொடர் மழையால், முதுமலை புலிகள் காப்பகம் உட்பட கூடலூர் வனப்பகுதிகள் பசுமைக்கு திரும்பின; மே 1ம் தேதி புலிகள் காப்பகம் திறக்கப்பட்டது.நேற்று முன்தினம் மாலை, கூடலூர் சுற்றுவட்டாரத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. அத்திப்பாலி, மங்குழி, ஏழுமரம் சாலை உட்பட பகுதிகளில் பகுதிகளில் மின்கம்பங்களின் மீது மரங்கள் சாய்ந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது. துப்புக்குட்டி பேட்டையில் உள்ள ஒரு வீடு, 2வது மைல் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் வீட்டின் மேற்கூரை காற்றில் பறந்தது. மேலும், இப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த வாழைகள் சாய்ந்தன.வாழை மரங்களில் ஒரு வாரத்துக்குள் அறுவடை செய்யயிருந்த நிலையில், காற்றால் பாதிக்கப்பட்டதால், விவசாயிகள் நஷ்டமடைந்தனர். கடன் பெற்று விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள், செய்வதறியாது திகைக்கின்றனர். எனவே, இப்பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயத்துக்கு, தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வெற்றிலை விலை உயர்ந்தும் பலனில்லை : கொடி காய்ந்ததால் விவசாயிகள் புலம்பல்**

ஆத்தூர்: விலை உயர்ந்துள்ள நேரத்தில் வெற்றிலை காய்ந்து கருகியதால் ஆத்தூர் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் ஆத்தூர், முல்லைவாடி, கடம்பூர், பைத்தூர், கூலமேடு, மஞ்சினி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம், செந்தாரப்பட்டி, கூடமலை, தம்மம்பட்டி, கருமந்துறை, தும்பல், ஏத்தாப்பூர் பகுதிகளில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. ஆத்தூர் பகுதியில் கருப்பு, வெள்ளை ரக வெற்றிலை அதிகளவில் பயிரிடப்படுகிறது. கருப்பு ரக வெற்றிலை காரம் மிகுந்திருப்பதால் கோவை, கடலூர்,

சென்னை, விழுப்புரம், புதுச்சேரி, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு திகளவில் அனுப்பி வைக்கப்படுகிறது. கருப்பு ரக 'பீடா' எனும் சக்கை வெற்றிலை ராஜஸ்தான் மாநிலத்துக்கும், வெள்ளை ரகம் கர்நாடகா, குஜராத் மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. கொளுத்தும் வெயில் காலத்தில் வாடல், செவட்டை, கொன்னை, சப்பாத்தி பூச்சி தாக்குதல் போன்றவை வெற்றிலை பயிரில் அதிகளவில் காணப்பட்டது. அதனால் வெற்றிலை வளர்ச்சியின்றியும், சுருண்டும் காணப்படுகிறது. மழையில்லாததால் ஏக்கருக்கு 50 கவுலி விளைவதற்கு வெறும் 10 முதல் 20 கவுலிகளே கிடைக்கிறது. வெற்றிலை பயிரில் பரவலாக இருந்த சப்பாத்தி பூச்சி தாக்கம் காரணமாக வெற்றிலை பயிர் காய்ந்து கருகியது. கடந்த இரு வாரமாக பெய்து வரும் மழையில் சப்பாத்தி பூச்சிகள் அழிந்து வருகின்றன. ஆத்தூர் வெற்றிலை மார்க்கெட்டில் வெற்றிலை வரத்து குறைந்து வருகிறது. வெளிமாநிலங்களில் வெற்றிலை தேவை அதிகம் காரணமாக இரு வாரத்தில் வெற்றிலை விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.ஆத்தூர் முல்லைவாடி விவசாயி நல்லமுத்து கூறியதாவது:

விளைந்த வெற்றிலையில் 'சப்பாத்தி பூச்சி' தாக்கம் காரணமாக செடிகள் கருகின. தற்போது பெய்த கோடை மழையில் சப்பாத்தி பூச்சிகள் பெரும்பாலும் அழிந்துள்ளன. ஆத்தூர் சுற்றுவட்டாரத்தில் வறட்சி காரணமாக 500 ஏக்கருக்கு மேலான வெற்றிலை பயிர் முற்றிலும் அழிந்துள்ளது. வெளிமாநிலத்தில் வெற்றிலை தேவை காரணமாக அதன் விலை உயர்ந்துள்ளது. வெள்ளை ரக வெற்றிலை கவுலி 30 ரூபாயும், ஒரு ஒத்து 1,200 முதல் 1,800 ரூபாயும், கருப்பு ரக வெற்றிலை கவுலி 50 ரூபாயும், ஒரு ஒத்து 2,500 ரூபாயும் விலை உள்ளது.வெறும் 400 முதல் 600 ரூபாய்க்கு விற்ற பீடா, கழிவு (சக்கை) வெற்றிலை ஒரு ஒத்து 3,000 ரூபாய் வரை விற்பனையாகிறது. மகசூல் குறைவாக உள்ள காலத்தில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. வறட்சியால் வெற்றிலை பயிர் கருகிய விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். நரசிங்கபுரம் வெற்றிலை மண்டி வியாபாரி கோபால் கூறுகையில், 'கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் பீடாவுக்கு பயன்படுத்தும் வெற்றிலையை ஆத்தூரிலிருந்து அதிகளவில் அனுப்புகிறோம். கழிவு, சக்கை எனும் பீடா வெற்றிலைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் வரவேற்பு அதிகம். கருப்பு பீடா வெற்றிலை ஒத்து 1,200 முதல் 3,000 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. 'குஜராத், ராஜஸ்தான் மாநிலத்துக்கு ஆத்தூரிலிருந்து நாள்தோறும் 400 கிலோ வரையிலான வெற்றிலை அனுப்பிவைக்கப்படுகிறது. விளைச்சல் குறைவு, தேவை காரணமாக வெற்றிலை விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது' என்றார்.

### ரூ.1.50 கோடிக்கு பருத்தி ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 4,600 குவிண்டால் பருத்தி 1.50 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்துக்கு டி.சி.ஹெச்., ரக பருத்தி 4,260 மூட்டைகள், ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 9,700 மூட்டைகள், கொட்டு பருத்தி 490 மூட்டைகள் என 14 ஆயிரத்து 450 மூட்டைகள் வந்தன. டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 4,739 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,260 ரூபாயும், ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 3,419 ரூபாயும், குறைந்தபட்சமாக 3,049 ரூபாயும், கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,310 ரூபாயும், குறைந்தபட்சமாக 1,485 ரூபாய்க்கும் ஏலம் போனது.

மொத்தம் 14 ஆயிரத்து 450 பருத்தி மூட்டைகள் கொண்ட 4,600 குவிண்டால் பருத்தி ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்று 50க்கும் மேற்பட்டோர் சேலம்-சென்னை நெடுஞ்சாலையில் நேற்றிரவு சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆத்தூர் இன்ஸ்பெக்டர் அண்ணாமலை மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் நேரடியாக வந்து விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து போக செய்தனர்.

**கோடை உழவு செய்து கோடி நன்மை பெறுங்கள்: விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுறுத்தல்**

திருவிடைமருதூர்:கோடை உழவு செய்து கோடி நன்மை பெற விவசாயிகள் முன்வர வேண்டும் என்று வேளாண்மைத் துறை அறிவுறுத்தி உள்ளது.இது குறித்து திருவிடைமருதூர் வேளாண்மை உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:திருவிடைமருதூர் வட்டாரத்தில் கோடை சாகுபடியாக நெல் 750 எக்டேரிலும், பருத்தி 120 எக்டேரிலும், பயறுவகை 64 எக்டேரிலும், எள் 69 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்களில் கோடை மழையை பயன்படுத்திக் கொண்டு கோடை உழவு செய்ய ஏற்ற தருணம் இதுவே ஆகும்.

கோடை உழவு செய்வதால் ஏற்படும் நன்மைகள்: கடின மண் நயம் கொண்ட களிவாகு, வண்டல் களிவாகு போன்ற நிலங்களில் ஏற்படும் நில வெடிப்பு தவிர்க்கப் பட்டு மண்ணின் ஈரப்பதம் ஆவியாகி விரையமாகாமல் காக்கப்படுகிறது.மண்வெடிப்பு தவிர்க்கப்படுவதால் கோடை நீர் பாய்ச்சும் போது அதிக தண்ணீர் விரையம் தவிர்க் கப்படுகிறது. மண்ணிலுள்ள தழைச்சத்து விரையமாவதும் தவிர்க்கப்படுகிறது.நடவுக்கும், நாற்றாங்காலும் செய்யப்படும் ஆரம்பகட்ட உழவு சுலபமாகின்றது.மண்ணின் நயமும் கட்டிகள் அமைப்பும் உடைக்கப்பட்டு மண்ணின் பவுதீக வளம் சீர் செய்யப்படுகிறது.மேல் மண் பொல பொலப்பாகப் படுவதால் விதை முளைப்புத் திறன் அதிகரிப்பதுடன் பயிரின் மகசூல் கூடுகிறது.

மண்ணின் நீர் பிடிப்புத்தன்மை அதிகரிக்கிறது.மண்ணின் உள்ள கூட்டுப்புழுக்கள் வெளிக்கொணரப்பட்டு அவை குறைந்துவிட வாய்ப்புள்ளது.களைகள் ஆரம்ப கட்டத்திலேயே அழிக்கப்படுகின்றன.மண்ணின் காற்றோட்டம் அதிகரிப்பதால் பயிர் வளர்ச்சிக்கு உகந்ததாகிறது.மண்ணில் உள்ள அங்ககப் பொருட்கள் மண்ணிலேயே மடக்கப்படுவதால் மண்ணின் அங்கக வளம் கூடுகிறது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கடல் மீன்கள் வரத்து குறைவால் குளத்து மீன்கள் விலை உயர்வு**

முத்துப்பேட்டை,: முத்துப்பேட்டையில் கடல் மீன்கள் வரத்து குறைவால் குளத்து மீன்களின் விலை அதிகரித்துள்ளது.கடலில் மீன் உற்பத்தியை பெருக்குவதற்காக மீன்பிடி தடைக்காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆழ்கடல் மீன்பிடிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. கரையோர பகுதியில் மட்டும் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன.முத்துப்பேட்டை கடலோரப் பகுதிகளில் கெண்டை மற்றும் வெள்ளாம்பொடி மீன்கள் மட்டுமே பிடிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. அதுவும் போதிய அளவுக்கு கிடைப்பதில்லை.இதனால் மீன் பிரியர்களின் எதிர்பார்ப்பை குளத்தில் வளர்க்கப்படும் மீன்கள் தான் பூர்த்தி செய்து வருகின்றன. குளங்கள், சிறு வாய்க்கால் பகுதிகளில் வளர்ப்பு மீன்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் பலர் ஈடுபட்டுள்ளனர். ஆண்டு முழுவதும் குறிப்பிட்ட நாளில் குளத்து மீன்கள் பிடிக்கப்பட்டு விற்பனைக்காக வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.தற்போது கடல் மீன்பிடிப்பு நிறுத்தம் காரணமாக வளர்ப்பு மீன்கள் அதிகளவில் பிடிக்கப்பட்டு

விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. கடல் மீன்கள் வரத்து குறைவை தொடர்ந்து குளத்து மீன்களுக்கு முத்துப்பேட்டையில் வரவேற்பு அதிகமாக உள்ளது. இதனால் விலையும் அதிகரித்துள்ளது. விலையை பொருட்படுத்தாமல் மீன் பிரியர்கள் குளத்து மீனை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். முத்துப்பேட்டை பகுதிகளில் சப்பான் கெண்டை, துள்ளு கெண்டை, சிலேபி மீன், கெளுத்தி மீன், விரால் மீன், செத்தல், கூறல் மற்றும் சின்ன கச்சல் மீன்கள் வளர்க்கப்பட்டு சீசன் நேரத்தில் பிடிக்கப்படுகின்றன.இதில் விறால் மீன்கள் கிலோ 240 ரூபாய் வரையும், கூறல் மீன்கள் 150 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. கடலோரத்தில் பிடிக்கப்பட்டு விற்பனைக்கு வரும் வெள்ளாம் பொடி வகை மீன்கள் கிலோ 60 ரூபாய்க்கு கிடைக்கிறது. சிறிய வகை வெள்ளை இறால்கள் கிலோ 120 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**நாட்க்கோழி வளர்க்க விவசாயிகள் ஆர்வம்**

பொங்கலூர்: பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான விவசாயிகள், கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள், ஒப்பந்த அடிப்படையில் கறிக்கோழிகளை வளர்க்கின்றனர். சில விவசாயிகள் மட்டுமே சொந்தமாக கறிக்கோழிகளை உற்பத்தி செய்கின்றனர்.சென்றாண்டு பொருளாதார மந்த நிலை காரணமாக, கறிக்கோழி நுகர்வில் சரிவு ஏற்பட்டது.

இதனால், விலை வீழ்ச்சி அடைந்தது; விலை சரிவடைந்ததை அடுத்து, பண்ணையாளர்களுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டது. இதன் காரணமாக, சில பண்ணையாளர்கள் தங்களது உற்பத்தியை குறைத்தனர்.வங்கியில் கடன் வாங்கி, பல லட்சம் செலவழித்து, பண்ணை அமைத்த விவசாயிகள், தாங்கள் வாங்கிய கடனுக்கு வட்டி கூட, கட்ட முடியாமல் அவதிப்பட்டனர். பண்ணைகளை சும்மா வைத்திருக்க விரும்பாத விவசாயிகள், நாட்டுக் கோழி வளர்ப்பில் ஆர்வம் காட்டுகின்றனர்.'பிராய்லர்' கோழிகளை விட, நாட்டுக்கோழிகளுக்கு அதிக விலை கிடைக்கிறது. 'பிராய்லர்' கோழி வளர்க்க அதிக ஆட்கள் தேவைப்படுகின்றனர். நாட்டுக்கோழி வளர்க்க மூன்றில் ஒரு பங்கு ஆள் இருந்தால் போதுமானது. இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் என்பதால், இறப்பு விகிதம் குறைவாகவே இருக்கிறது. மருந்துகளுக்கு ஏற்படும் செலவும் குறைவு.இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது:'பிராய்லர்' கோழிகள் விற்பனை சீராக இருப்பதில்லை. விலை ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பதால், திடீரென பெரிய அளவில் நஷ்டம் ஏற்படுகிறது. நாட்டுக்கோழிகளுக்கு 'டிமாண்ட்' அதிகம் இருப்பதால், விற்பனை செய்வதில் சிரமம் இருப்பதில்லை. சொந்தமாக நாட்டுக்கோழி வளர்க்க பணம் அதிகம் தேவை என்பதால், பெரிய பண்ணையாளர்களிடம் கூலிக்கு கோழிகளை வளர்க்கிறோம். கிலோவுக்கு ஒன்பது ரூபாய் கூலியாக வழங்கப்படுகிறது. 100 நாட்களில் கோழிகள் வளர்ந்து விடுகின்றன. இதனால், 'பிராய்லர்' கோழிகளைவிட, அதிக லாபம் கிடைக்கிறது, என்றனர்.

டூர் அணை நீர்பிடிப்பு பகுதியில் 40 கிலோ எடையுள்ள கட்லா மீன்

மே 10,2010,00:00 IST



மேட்டூர் : மேட்டூர் அணை கோட்டையூர் நீர்பிடிப்பு பகுதியில், நேற்று 4.5 அடி நீளம், 40 கிலோ எடையுள்ள மெகா சைஸ் கட்லா மீன் சிக்கியது. மேட்டூர் அணையில் கட்லா, ரோகு, மிர்கால் உட்பட 20க்கும் மேற் பட்ட மீன் வகைகள் உள்ளன. அணையில் 2,000 மீனவர்கள் மீன் பிடிக் கின்றனர். நீர்வரத்து குறைவாக இருப்பதால், மேட் டூர் அணை நீர்மட்டம் தற்போது 73 அடியாக குறைந்து விட்டது.

அணையின் ஆழமான பகுதியில் வசிக்கும் பெரிய மீன்கள், மீனவர்கள் வலையில் சிக்க துவங்கியுள்ளன. சில வாரங்களாக அணையில் 10 முதல் 30 கிலோ எடையுள்ள கட்லா மீன்கள் அதிகளவில் பிடிபடுகின்றன. நேற்று கோட்டையூர் நீர்பரப்பு பகுதியில் மீனவர் ஒருவர் வீசிய வலையில் 40 கிலோ எடை, 4.5 அடி நீளம் கொண்ட மெகா சைஸ் கட்லா மீன் பிடிபட்டது. இந்த மீனின் விலை 3,600 ரூபாய் என்பதால், அதை பிடித்த மீனவர் மகிழ்ச்சியடைந்தார். மெகா சைஸ் கட்லா மீன், வியாபாரிகள் மூலம் விற் பனைக்காக கோல்கட்டா மீன் மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## உடுமலையைச் சேர்ந்த விவசாயி மனைவி ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி

*உடுமலை,மே.10–*

*உடுமலையைச் சேர்ந்த விவசாயி மனைவி ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளார்.*

*434–வது ரேங்க்*

*2009–ம் ஆண்டின் ஐ.ஏ.எஸ்.தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளது. இதில் திருப்பூர் மாவட்டம் உடுமலை நகர் தெய்வ சிகாமணி பட்டித்தைச்சேர்ந்த ஜெயக்குமார் என்ற விவசாயி மனைவி ராணி காஞ்சனா வெற்றி பெற்றுள்ளார். எம்.எஸ்சி. மைக்ரோ பயாலஜி பட்டம் பெற்ற ராணி காஞ்சனா ஏற்கனவே 3 முறை ஐ.ஏ.எஸ்.தேர்வு எழுதினார். அதில் தேர்ச்சி பெறவில்லையென்றாலும் தொடர்ந்து விடா முயற்சியுடன் 4–வது முறையாக ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி, 434–வது ரேங்கில் இப்போது வெற்றி பெற்றுள்ளார். இவருடைய தந்தை முருகவேல் வருவாய்த்துறையில் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.*

*ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்றது குறித்து ராணி காஞ்சனா கூறியதாவது:–*

*ஊக்கம்*

*இந்த தேர்வில் நான் வெற்றி பெற, என் பெற்றோர் மற்றும் கணவர் கொடுத்த ஊக்கமே காரணம். நான் முதல் இரண்டு முறை முதல் கட்ட தேர்விலேயே தோல்வியடைந்தேன். 3–வது முறை நேர்முக தேர்வு வரை சென்றும் தேர்ச்சி பெறவில்லை.*

*இருப்பினும் என் கணவர் எனக்கு தொடர்ந்து ஊக்கம் அளித்து, எனக்கு பக்க பலமாக இருந்ததால் 4–வது முறையாக முயற்சி செய்து வெற்றி பெற்றுள்ளேன். நான் சென்னையில் உள்ள ஸ்ட்ரேக்டிஐ ஐ.ஏ.எஸ். அகடமியின் இயக்குனர் சத்யாவிடம் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு பயிற்சி பெற்றேன். ஐ.பி.எஸ்.அதிகாரி சைலேந்திரபாபுவிடம் பெற்ற ஆலோசனைகள் நேர்முக தேர்வுக்கு உறுதுணையாக இருந்தது.*

*இவ்வாறு ராணி காஞ்சனா கூறினார்.*

*ராணி காஞ்சனாவுக்கு ஐ.எப்.எஸ். அல்லது ஐ.ஆர்.எஸ். பதவியே கிடைக்கும் என்பதால், ஐ.ஏ.எஸ். ஆகியே தீர வேண்டும் என்ற லட்சியத்துடன் உள்ள அவர், மீண்டும் ஒரு தேர்வுக்கு தயாராகி வருவதாக தெரிவித்தார்.*

## கூடலூரில், சூறாவளி காற்றுடன் மழை: 3 ஆயிரம் வாழை மரங்கள்– பாகற்காய் கொடிகள் சரிந்து நாசம் விவசாயிகள் கவலை

*கூடலூர்,மே.10–*

*கூடலூரில் சூறாவளி காற்றுடன் மழை பெய்ததால் 3 ஆயிரம் நேந்திர வாழை மரங்கள், பாகற்காய் கொடிகள் சரிந்து விழுந்தன. இதனால் விவசாயிகள் மிகுந்த*

கவலையில் உள்ள னர்.

சூறாவளி காற்றுடன் ஆலங்கட்டி மழை

கூடலூர் பகுதியில் சூறாவளி காற்றுடன் ஆலங்கட்டி மழை நேற்று முன்தினம் பெய்தது. சுமார் ½ மணிநேரம் பெய்த மழையால் கூடலூர், பந்தலூர் தாலுகாவில் மின்தடை ஏற்பட்டது. மேலும் அத்திப் பாளி, மரப்பாலம், துப்புக்குட்டி பேட்டை ஆகிய பகுதிகளில் மரங்களும், வீட்டின் மேற்கூரைகளும் உடைந்து விழுந்தது. இதே போல் கூடலூர் 2–வது மைல் வேடன்வயல் காலனி யில் பெருமாள் என்பவரது வீட்டின் மேற்கூரை காற்றில் பறந்து அருகே வசித்து வந்த செங்கமலம் என்பவரது வீட்டின் மீது விழுந்தது. இதில் செங்கமலம் வீட்டின் கூரையும் சேதம் அடைந்தது.

தகவல்

மேலும் கூரை விழுந்து ஒரு பெண் காயம் அடைந்தார். அதேபகுதியில் அசைனுப்பா என்பவரது வீட்டின் மேற் கூரைகள் உடைந்து விழுந்தது. இதையொட்டி கவுன்சிலர் ஜெயக்குமார், 2–வது மைல் தி.மு.க. கிளை செயலாளர் நாடிமுத்து ஆகியோர் வருவாய் துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

சூறாவளி காற்று சுழற்றி வீசியதால் கூடலூர் ஏழுமரம், அத்திப்பாளி, கோத்தர்வயல், 2–வது மைல் உள்ளிட்ட பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்த நேந்திர வாழைகள் சரிந்து விழுந்தது. இதில் ஏழுமரம் பகுதியில் சுப்பிரமணியன் என்பவருக்கு மட்டும் 1,500 வாழை மரங்கள் சரிந்து விழுந்து சேதம் அடைந்தது.

பாகற்காய் கொடிகள்

அதே பகுதியில் ஆனந்த் என்பவர் 1 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு இருந்த பாகற்காய் கொடிகள் சரிந்து விழுந்து தரைமட்டமாயின. கூடலூர் பகுதியில் சுமார் 3 ஆயிரம் வாழை மரங்கள் சரிந்து விழுந்து சேதம் அடைந்ததாக கூடலூர் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் பாகற்காய் கொடிகளும் பெருமளவு சரிந்து விழுந்து நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. நேந்திர வாழை மரங்கள் சரிந்து விழுந்து நஷ்டம் ஏற்பட்டுள் ளதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு தொகையை அரசு வழங்க வேண்டும் என கூடலூர் விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

ஊட்டியில் 2 நாட்கள் நடைபெற்ற

# ரோஜா கண்காட்சியை 35 ஆயிரம் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்

ஊட்டி, மே.10–

ஊட்டியில் 2 நாட்கள் நடைபெற்ற ரோஜா கண்காட்சியை சுமார் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தார்கள்.

ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படும். இதனால் பொது மக்கள் குளுமையான சுற்றுலா ஸ்தலங்களை தேடி செல்வார்கள். மே மாதம் பள்ளிகளுக்கு விடுமுறை என்பதால் குடும்பத்துடன் பலர் சுற்றுலா இடங்களுக்கு செல்வார்கள்.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமாக நீலகிரி மாவட்டம் உள்ளது. கோடை காலத்திலும் குளுமையாக காணப்படும் இந்த மாவட்டத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

## கோடை விழா

இங்கு சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க ஆண்டுதோறும் மே மாதம் கோடை விழா நடத்தப்படுகிறது. இதில் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழக்கண்காட்சி, காய்கறி கண்காட்சி, வாசனை திரவியங்கள் கண்காட்சி, படகு போட்டி போன்றவை நடத்தப்படுகின்றன.

இது தவிர பரத நாட்டியம், பல்சுவை நிகழ்ச்சிகள், பழங்கால கார் அணிவகுப்பு, நாடகங்கள், படகு அலங்கார போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

## ரோஜா கண்காட்சி

ஊட்டி ரோஜா பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நேற்று முன்தினம் ரோஜா கண்காட்சி தொடங்கியது. இதனை தமிழக கதர் வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.

இந்த ரோஜா கண்காட்சியல் 10 ஆயிரம் ரோஜா மலர்களால் உருவாக்கப்பட்ட கலங்கரை விளக்கம், 6 ஆயிரம் ரோஜா மலர்களால் உருவாக்கப்பட்ட யானை மற்றும் ஒனேக்கல் நீர்வீழ்ச்சி, மாம்பழம் போன்றவை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது.

## 35 ஆயிரம் சுற்றுலா பயணிகள்

இந்த ரோஜா கண்காட்சியை முதல் நாளன்று சுமார் 14 ஆயிரம் சுற்றுலா பயணிகளும், 2–வது நாள் அன்று சுமார் 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளும் கண்டு ரசித்து சென்றனர். சுற்றுலா பயணிகளை வியக்க வைத்த ரோஜா கண்காட்சி நேற்றுடன் முடிவடைந்தது.

நிறைவு நாளான நேற்று ரோஜா கண்காட்சியை காண ஒரே நாளில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்ததால் ரோஜா பூங்கா திருவிழா கூட்டம் போல் களை கட்டி காணப்பட்டது.

## போக்குவரத்து பாதிப்பு

தற்போது சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு அதிகளவில் வாகனங்களில் வர தொடங்கி உள்ளனர். ரோஜா கண் காட்சியை நூற்றுக்கணக்கான வாகனங்களில் சுற்றுலா பயணிகள் வந்ததால் ஊட்டி நகரம் போக்குவரத்து நெரிசலில் சிக்சி திணறியது.

போலீசார் காலை முதலே போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டனர். அதிகப்படியான வாகனங் களால் வந்ததால் போக்கு வரத்து நெரிசலை சீரமைப் பதில் சிரமம் ஏற்பட்டது.

மேலும் ஊட்டி நகரில் வாகனங்களை நிறுத்த இட வசதி இல்லாததால் சுற்றுலா பயணிகள் கடும் அவதி அடைந்தனர். சுற்றுலா பயணிகளின் வருகையால் தற்போது ஊட்டி நகரம் களை கட்டி காணப்படுகிறது.



ஊட்டி ரோஜா பூங்காவில் நடைபெற்ற ரோஜா மலர் கண்காட்சியின் நிறைவு நாளான நேற்று நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் ரோஜா பூக்களை கண்டு ரசிப்பதை படத்தில் காணலாம்.



ஊட்டி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் 3 நாட்கள் நடைபெற்ற நாய்கள் கண்காட்சி நேற்றுடன் முடிந்தது. இதில் நேற்று வீட்டு நாய்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட நாய்களை கொஞ்சி மகிழும் சிறுமிகளை படத்தில் காணலாம்.